1981 ஏப்ரல் 6]

நிலக்கரிச் சுரங்கம் வந்தபிறகு அந்தப் பகுதியில் உள்ள கிணறுகளில் தண்ணீர் வற்றிவிட்டது. ஆகவே, அந்தச் சுரங்கத்தில் இருந்து வீணாகச் சென்று கடலில் கலக்கிற கழிவு நீரை அந்தப் பகுதி மக்களின் குடிநீர் வசதியைப் பூர்த்தி செய்வதற்காக அரசு முயற்சிக்க வேண்டும். அப்படிச் செய்வதில் அரசு ஏன் காலதாமதம் செய்கிறது, உடனடியாக அதைச் செய்வதற்கு, துரிதமாகப் பரிசீலிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இப்போதே கூட கழிவு நீர் கிட்டத்தட்ட 10,000 காலன் ஒரு நிமிடத்திற்கு வெளியேறுவது அந்த ஆற்றிலே திருப்பிவிடப்பெற்று, அந்தப் பகுதியில் உள்ள நிலத்தடி நீர் பாதிக்கப்படாத அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கேள்வி இரண்டாவது சுரங்கம் நெய்வேலியில் வெட்டப்படுகிறபோது கிடைக்கிற உபரி நீரைப் பற்றியதாகும். அதை எப்படிப் பயன்படுத்தலாம் என்று சிந்திக்கிறபோது குடிநீர் கொடுப்பது என்பது எல்லாம் சேர்த்துத்தான் அரசு பரிசிலித்து வருகிறது.

தர்மபுரி விவசாயக் கருவிகள் பழுது பார்க்கும் நிலையத்திலுள்ள ஆழ்கிணறு தோண்டும் இயந்திரங்கள் இடமாற்றம்

*வினா எண். 663—திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியில் உள்ள அக்ரோ சர்வீஸ் சென்டரில் உள்ள ஆழ் கிணறு தோண்டும் இயந்திரங்கள் வேறு மாவட்டத்திற்கு மாற்றிச் செல்லப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் மீண்டும் இம் மாவட்டம் பயன்பெறும் வகையில் திரும்ப அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

'பேரா பாறை' நதியை கிழக்கே திருப்பிவிடும் திட்டம்

*வினா எண். 664—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி அரபிக் கடலில் கலக்கும் 'பேரா பாறை' நதியை மேற்கு மலையைக் குடைந்து கிழக்கே திருப்பித் தமிழகத்தின் பாசனத்துக்கு ஏற்பாடு செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி அரபிக்கடலில் கலக்கின்ற நதிகளை கிழக்கே திருப்பி தமிழகத்தின் பாசனத்திற்கு ஏற்பாடு செய்ய வேறு ஏதாவது திட்டங்களையோ அல்லது முயற்சிகளையோ அரசு மேற்கொண்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கெனவே மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைத் திருப்பி விடுவதைப் பற்றிய தனியான முயற்சி அரசு எடுத்துக்கொண்டு வருவதை மன்றம் அறியும். இப்போது இந்தக் கேள்வி 'டேரா பாறை' பற்றியதாகும். இந்த 'டேரா பாறை' என்கிற சிற்றாறு பாம்பாறு என்கிற பம்பையாற்றின் கிளை நதியாக இருப்பதால் ஏற்கெனவே நாம் விவாதத்தில் வைத்து இருக்கிற 6 நதிகளில் ஒன்றாக இருப்பதால், அதைப் பற்றி பேசுகிறபோதுதான் அது இடம்பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பதால்தான் இந்த பதிலைச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 665, 666, மற்றும் 667 ஆகியவை மாண்புமிகு ஆதித் திராவிடர் நல அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

உ. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சத்திரப்பட்டி கைத்தறி நெசவாளர் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், ஏ. உமாநாத், ஆர். கிருஷ்ணன், சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, மு. ஆறுமுகம், எஸ். ஆண்டித்